### ராஜாளிப்பட்டி பள்ளிக் குழந்தைகளுக்குப் பயிற்சியளித்த

# வெளிநாட்டினருக்குப் பாராட்டு

**விராலிமலை, ஆக. 23:** விராலிமலை, ராஜாளிப்பட்டி அரசு நடுநிலைப் பள்ளியில் குழந்தைகளுக்கு இசை, ஓவியம் உள்ளிட்ட பயிற்சிகளை அளித்த வெளிநாட்டு தன்னார்வலர்களுக்குப் பாராட்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

பிரான்ஸைச் சேர்ந்த ஜூலி, கரோலின் பெட்ரீசியா ஆகியோர் மேட் நிறுவனத்தின் சார்பில் ஆஸ்மின் ஒருங்கிணைப்பாளர் சாரா தலைமையில் மாவட்டக் கல்வித் துறையின் அனுமதியோடு இப்பள்ளி குழந்தைகளுக்கு 21 நாட்களாக பல்வேறு பயிற்சிகளை அளித்தனர்.

இவர்களுடைய பணியைப் பாராட்டும் வகையில் இந்தப் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

மேட் நிறுவனத்தின் இயக்குநர் சிரில் அலெக்ஸாண்டர், பள்ளியின் தலைமையாசிரியர் ஜூலியட் அருள்ஜோதி, ஊராட்சித் தலைவர் நடராஜ் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

விழா ஏற்பாடுகளை பயிற்சி ஒருங்கிணைப்பாளர் செல்வக்குமார், குளோரி, பிரேமா ஆகியோர் செய்திருந்தனர்.



விழாவில் பேசுகிறார் பள்ளித் தலைமையாசிரியர் ஜூலியட் அருள்ஜோதி.